# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

கடைகளில் கணக்கு எழுதும் கணக்கர்கள் நம் பூமியில் மட்டுமல்ல நரகத்திலும் இருப்பதாகக் கருடபுராணம் கூறுகிறது. சென்ற கட்டுரையில் கூறப்பட்ட படி பன்னிரு சிரவணர்கள் ஜீவர்களின் பாவங்களை கணக்கெடுத்து சித்ர குப்தன் என்ற தம் தலைவனுக்கு அறிவிக்க அவன் மூலம் எமன் பாவ புண்ணியங்களை யார் யார் எவ்வெப்பொழுது செய்தார்கள் என்பதை அறிந்து தண்டிக்கிறான் அந்தக் கணக்கெடுப்பு மிகத் தூய்மையாக இருக்கும் என்று பெருமாள் கூறுகிறார். நம் பூவுலக கம்ப்யூட்டர்களும் கணக்கர்களும் செய்யும் கணக்குப் பிழைகளை அங்கே பார்க்க முடியாது.

பாவங்களை 3 தலைப்புகளின் கீழ் பிரித்துக் கொள்ளுகிறார்கள். மனத்தினால் செய்யப்பட்டவை, வாக்கினால் செய்யப் பட்டவை, உடலால் பண்ணப்பட்டவை என மூன்றாக பகுத்துக் கொள்ளுகிறார்கள். மனதுக்குள்ளே வைதுகொண்டே வெளித் தோற்றத்தில் புன்சிரிப்புடன் தானம் கொடுத்து உலகை ஏமாற்றும் எத்தர் வேலை அங்கே செல்லுபடியாகாது. ஒவ்வொரு ஆத்மாவும் எந்த எந்த வினாடி எந்த எந்த பாப சிந்தனைக்கு இடம் கொடுத்தது என்பதையெல்லாம் சிரவணர்கள் பட்டவர்த்தனமாக அறிவித்து விடுவார்கள் இப்படித் தான் மனத்தால் நல்லதை நினைத்தாலும் அது புண்ணியம் என்று சாத்திரங்களில் எழுதப்பட்டது 'அறம் செய்' என்று சொல்லாமல் 'அறம் செய்ய விரும்பு' என்றார்களே அதைக் கவனித்தீர்களா? மனம் தான் மனிதன் உயர்வதற்கும் வீழ்வதற்கும் காரணம் என்று கீதாசார்யன் சொன்னதும் இதனால் தான். முனிவர்கள் தவ வலிமையைப் பெருக்கிக் கொள்ளுவது மன அடக்கித்தினால் தான். அதனால் தான் பெருமாள் கருடனுக்கு இந்த இடத்தில் மனச் சுத்தத்தை வலியுறுத்திச் சொல்லுகிறார்.

வாக்கினால் செய்யப்படும் நற் காரியங்களும், துர்க்கார்யங்களும் என்ன பலன் தருகின்றன என்பதை எம்பெருமான் எடுத்துரைக்கிறார். பெரியோர்களைப் போற்றுதல், சாத்திர நூல்களைப் பயபக்தியுடன் படித்தல், என நாவினை நல்வழியில் பயன் படுத்தியவர்கள் வாக்குத் திறமையால் வாழ்வில் வெற்றியை அடைவார்கள். கெட்ட வார்த்தைகளைப் பேசுபவர்கள், பெரியோரை ஏசுபவர்கள் பொய் உரைப்பவர்கள் ஆகியோருடைய வாயிலிருந்து புழுக்களும் துர்நாற்றமும் வெளிக் கிளம்பும்.

"அரிது அரிது மானிடராதல் அரிது' என்ற பொன் மொழி எதற்காகச் சொல்லப்பட்டது என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். வேறு எந்த ஜென்மாவுக்கு கொடுக்கப்படாத ஆற்றல்களும் உடல் அமைப்பும் மனிதப் பிறப்புக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. உண்ணுதல்,

குடித்தல், உடலின்பம் அனுபவித்தல் முதலியவை விலங்கு மற்றும் பறவைகளுக்கும் கூட உண்டு. மனித சரீரத்திற்கென்று சிறப்பாக ஏற்பட்ட தகுதிகள் புண்ணிய காரியங்களே ஆகும். தீர்த்தங்களில் நீராடுதல், ஆலய வழிபாடு, சத் விஷயங்களைப் பேசுதல், சான்றோரைப் பணிதல், தானதர்மம் செய்தல், முதலியவை மனிதருக்கே உரிய சிறப்பு.

“கங்கா ஸ்நானம் புண்ணியம் என்றால் கங்கையினுள்ள மீன்களும் தவளைகளும் மோட்சமடைய வேண்டுமே! கோவிலுக்குப் போவது புண்ணியமென்றால் கோபுரங்களில் தொங்கும் வௌவால்கள் நற்கதியடைய வேண்டுமோ!” என்று சிலர் விதாண்டாவாதம் பேசுகிறார்கள். ஆறறிவுள்ள மனிதன் அறிந்து செய்வதைப் பற்றித் தான் சாத்திரங்கள் விதிகள் பேசுகின்றன. நீந்தும் மீன்களுக்கும் பறக்கும் பறவைகளுக்கும் பாபம் என்றால் என்ன, புண்ணியம் என்றால் என்ன, என்று தெரியாது. படிக்கவும் சிந்திக்கவும் தெரிந்த மனிதனுக்குத் தான் ஏற்படுத்தப்பட்டவை சாத்திரங்கள். அந்த விதண்டாவாதத்தை எடுத்துக் கொண்டால் கூட அதற்கும் பெரியோர்கள் ஒரு அமைதி சொல்லியிருக்கிறார்கள். தமிழில் பொருட் பெற்றியென்றும் வடமொழியில் ‘வஸ்துஸ்வபாவம்’ என்றும் அதற்குப் பெயர். கங்கையில் கிடக்கும் மீன்களுக்கும் அந்த கங்கா சம்பந்தம் வீண் போகாது. பிறவிச் சுழலில் அதற்கும் ஒரு பலன் உண்டு. ஓரளவாவது அதனால் நற்கதி விளையும். கோவில் விளக்கில் உள்ள திரியின் நெய்யை ஒரு எலி நக்கிய போது திரி தூண்டப்பட்டது என்ற ஒரு இயற்கையான சம்பவத்துக்காக அந்த எலி மறுபிறப்பில் மகா சக்ரவர்த்தியாகப் பிறந்தது என்று தான் அறநூல்கள் கூறுகின்றன.

இந்த உடலை நற்காரியங்களுக்காகப் பயன் படுத்துபவர்கள் நோயற்ற துய்ப்புக்குரிய சரீரத்தை அடைவார்கள் என்றும், பிறர் துன்பத்துக்கு காரணமாக இந்த உடலைப் பயன் படுத்தியவர்கள் அதன் விளைவாக நோய் நொடிகள் நிறைந்த சரீரத்தை அடைவார்கள் என்றும் பெருமாள் கூறுகிறார்.

இறந்து போனவன் 11 ஆம் நாள் முடியும் வரை தான் வாழ்ந்த வீட்டுக்கு முன்னால் பசி தாகத்தோடு நிற்பான் என்கிறார் பெருமாள். எனவே அவனைக் குறித்து 11–வது நாளிலாவது 12–வது நாளிலாவது தானங்கள் செய்ய வேண்டும் என்பது இறைவன் ஆணை. அன்ன தானம், கோதானம், திலதானம், தீபதானம் என்பதைப் பற்றியும் கூறுகிறார். பததானம் என்பது குடை, துணி, மோதிரம், உதக கும்பம், ஆசனப்பலகை, அரிசி, முதலியவற்றை சத்பிராம்மணருக்கு தானம் தருவதாகும்.

இந்தப் பகுதிக்குப் பிறகு கருடாழ்வார் ஸ்ரீவாசுதேவனிடம் ஒரு பயங்கரமான கேள்வியைக் கேட்கிறார். “நரகங்கள் என்பவை யாவை? அவை எப்படி இருக்கும்? யார் யாருக்கு எந்தெந்த விதமான நரகம்?” என்பது தான் அது. தம் பதிலில் ஸ்ரீமாதவன் நரகங்கள் மொத்தம் 84 லட்சம், என்று கூறுகிறார். இவற்றில் ஒரு 28 நரகப் பகுதிகளை தனியே பிரித்து, அவற்றுக்கு உரிய தனித்தனி பெயர்களையும் சொல்லி எந்த எந்தப் பாவம் செய்தவன், எந்த எந்த நரகப் பகுதிக்குச் செல்லுவன் என்றும் அங்கே தண்டனைகள் என்னென்ன வகையாக இருக்கும் என்றும் திருவாய் மலர்ந்தருளுகிறார். அந்தப் பகுதி பயங்கரமானது தான் என்றாலும் மிக சுவாரஸ்யமானது. அதை அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.